


# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



மனிதனுக்கு வாழ்க்கையில் சிலசமயம் யாருக்காவது உதவி செய்ய வாய்ப்பு கிடைக்கும். அதைச் செய்வதற்கு மனதும் அனுகூலமாக இருக்கும். அச்சமயத்தில் அவன் விவேகத்துடன் செயல்பட வேண்டும். உதவி செய்யும் முன்பு அது உதவி கேட்பவனுக்கு பயனளிக்குமா, பயனளிக்காதா என்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். தான் செய்யும் உதவியால் உதவி கேட்பவன் தனது கஷ்டத்திலிருந்து வெளியே வந்துவிடுவான் என்றால் அவனுக்குக் கட்டாயமாக உதவி செய்யவேண்டும்.

உதாரணமாக நன்றாகப் படிக்கும் ஒரு பையனுக்கு பள்ளிக் கட்டணம் செலுத்த பணம் கொடுத்து உதவலாம். ஒரு நல்ல மனிதருடைய பெண்ணின் கல்யாணச் செலவிற்கு உதவலாம். இதுபோன்ற உதவிகள் மிகவும் பாராட்டுக்குரியவை. உதவி செய்தவனுக்கும் அது நன்மை அளிக்கும்.







ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

இதற்கு ஒரு பெரியவர் இவ்வாறு உபமானம் கொடுத்துள்ளார்.

एकमपि सतां सुकृतं विकसति तैलं यथा जले व्यस्तम् |
असतामुपकारशतं संकुचति सुशीतले घृतवत् ||
ஏகமபி ஸதாம்' ஸுக்ரு'தம்' விகஸதி தைலம்' யதா² ஜலே வ்யஸ்தம் |
அஸதாமுபகாரஶதம்' ஸங்குசதி ஸுஶீதலே க்‘ரு'தவத் ||

அதாவது ஒரு நல்ல மனிதனுக்கு உபகாரம் செய்தால் அந்த உபகாரம் தண்ணீரில் எண்ணையை விட்டதுபோல் பரவிவிடும். அதே ஒரு கெட்ட மனிதனுக்கு நூறு உபகாரம் செய்தாலும் குளிர்காலத்தில் நெய் உறைந்து சுருங்குவதுபோல் சுருங்கிவிடும்.

இதை நன்றாகப் புரிந்துகொண்டு, உதவி செய்யும் முன்பே நன்றாகச் சிந்தித்து தகுதியுள்ளவருக்கே உதவி செய்யவேண்டும்.

*ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்*

"மனிதனின் ஜீவிதத்திலே எவ்வளவோ முன்னுக்கு வந்தாலும் குருபக்தி என்ற ஒன்று இல்லையென்றால் அவனுடைய வாழ்க்கை வீண்தான்" என்று பகவத்பாதாளே சொன்னார். அதனால் நாம் எவ்வளவு பெரிய மனிதரானாலும் எவ்வளவு பெரிய படித்தவர்களானாலும் எவ்வளவு பணக்காரர்களானாலும் குருபக்தி என்பது பரம அவசியம்.

"ஸம்ப்ரதாய பரிபாலன புத்த்யா" என்றபடி சங்கரர் தம்முடைய குருவாகிய கோவிந்தபகவத்பாதாளை அத்யந்த ஸ்ரத்தா பக்திகளோடு சேவித்தார் என்கிற போது நமக்கும் குருபக்தி பரம அவசியம் என்று தனியாக சொல்ல வேண்டியதே இல்லை. அந்த குருபக்திதான் நமக்கு எல்லாவிதமான சிரேயஸ்ஸை உண்டாக்கும். பரமேஷ்டி குருநாதர் ஸ்ரீ ந்ருஸிம்ஹ பாரதீ மஹா ஸ்வாமிகள் ஓரிடத்திலே, "குருவினுடைய அனுக்ரஹம் இல்லாவிட்டால் உலகத்திலே யாருக்குத்தான் இஷ்டார்த்தங்கள் கிடைக்கும்? ஆகையினால், எல்லா சௌக்கியங்களுக்கும் எல்லா நன்மைகளுக்கும் மற்றும் எல்லா சிரேயஸ்களுக்கும் மூல காரணமான குருபாதத்தை நீ வழிபடு" என்று உபதேசம் பண்ணினார். நமக்கு மஹான்கள் எல்லாம் உபதேசம் பண்ணுவது நாம் நன்றாக இங்கு சிரேயஸ்ஸை அடைய வேண்டும் என்பதற்காகத்தான். அவர்களுடைய உபதேசங்களை அனுசரித்து நாம் நம் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தால் நமக்கு நன்மை விளையும். அப்படி அவற்றைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் நமக்குத்தான் இழப்பு! அவர்களுக்கு ஒன்றும் இல்லை!


# Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

### 8. யோக சக்தி




ஆசார்யாரவர்களுடைய ஞாபக சக்தி அபாரமாயுள்ளதென்பதை யாவரும் அறிவார்கள். ஐம்பது வயதுள்ள ஒருவர் காஷாய உடுப்புடன் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு வங்காளியென்று சொல்லிக்கொண்டு சிருங்கேரிக்கு வந்தார். அவர் இந்துஸ்தானியும் ஸம்ஸ்கிருதமும் தான் பேசினார். "தமிழ் தெரியுமா?" என்று ஆசார்யார் கேட்க, "தெரியாது" என்று சொன்னார். “இதற்கு முன் இந்தப்பக்கம் வந்திருக்கிறீரா?” என்று கேட்க, “இல்லை” என்று சொல்லிவிட்டார். உடனே ஆசார்யார் தமிழில் "ஏனப்பா, உன் உபநயனத்திற்காக உன்னை அழைத்துக்கொண்டு உன் தாயார் யாசகத்திற்கு வரவில்லையா?" என்று அதட்டிக் கேட்டார். உடனே திடுக்கிட்டு அவர் தமிழில் "ஆமாம்" என்று பதில் சொல்லிவிட்டார். காஷாய உடைதரித்து பொய் சொன்னவரிடம் முகாவலோகனம் செய்யக்கூடாதென்று உடனே ஸ்வாமிகளவர்கள் உள்ளே போய்விட்டார்கள்.

ஸ்ரீஸ்வாமிகளவர்கள் பால்யத்தில் வித்யாப்யாஸம் செய்யும் போது தக்ஷிண தேசத்திலிருந்து சிலர் ஸஹபாடிகளாக இருந்தார்களென்று முன்பு சொல்லப்பட்டது. அப்படியிருந்தவர்களில் ஒருவரான ஸுப்ரஹ்மண்ய தீக்ஷிதர் என்பவருக்கு அப்பொழுதே ஒரு சிறு பெண் இருந்தாள். பின்னால் அவர் ஊருக்குப் போய்விட்டார். இதற்கு முப்பது வருஷம் சென்று வேறு ஏதோ ஓர் ஊரில் ஸ்ரீஸ்வாமிகளவர்கள் தீர்த்தப் பிரஸாதம் கொடுத்துக்கொண்டிருக்கும் ஸமயம்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஒரு ஸுமங்கலியம்மாள் கைநீட்டினவுடன் "தீக்ஷிதர் பெண்ணா?" என்று கேட்டார்கள். நாலைந்து வயதில் பார்த்த குழந்தையை முப்பத்தி ஐந்து வயதான பிறகு எப்படி அடையாளம் கண்டுபிடிக்க முடியுமோ தெரியவில்லை.

இந்த ஸம்பவங்கள் ஏதோ கொஞ்சம் முகஜாடை இருந்திருக்குமென்று சொல்ல இடம் கொடுக்கலாம். இருபத்தைந்து வயதில் ஒருவர் பஞ்சாக்ஷர உபதேசம் வேண்டுமென்று கேட்க, "கர்ப்ப தீக்ஷை தெரிகிறது. ஸம்ஸாரம் பிரஸவித்த பிறகு வாருங்கள்" என்றார். தீர்த்தப் பிரஸாதத்திற்காக ஒரு ஸ்திரீ கையை நீட்ட "நாளைக்கு வந்தால் தருகிறேன்" என்று ஸ்ரீஸ்வாமிகள் சொன்னார்கள்: அவள் வீட்டுக்குப் போனவுடன் தன் பர்த்தா காலமாய்விட்ட விபரம் தெரிந்துகொண்டாள். இவர்களுடைய அசுத்தி ஆசார்யாருக்கு எப்படி தெரிந்தது? ஓர் ஆலயத்திற்குப் போனவுடன் "முன் நடந்த கும்பாபிஷேகத்தில் காப்புக் கட்டிக்கொண்டவர் அபிஷேகம் செய்யவில்லையென்று தெரிகிறது" என்றார்கள்; விசாரிக்கையில் வாஸ்தவமாக இருந்தது. இன்னொரு ஊரில், "கிராமம் க்ஷீணமாய்ப் போகிறது. பரிஹாரம் செய்து அனுக்ரஹிக்க வேண்டும்" என்று கிராமத்தார் பிரார்த்திக்க, அவ்வூர் சிவன் கோவிலுக்குப் போய் தர்சனம் செய்து, "அம்மனுக்கு பிரதிதினமும் வடையும் பாயஸமும் நைவேத்யம் செய்யுங்கள்" என்று சொன்னார்கள்; அப்படியே செய்ததில் மறுபடியும் கிராமம் செழிப்பையடைந்தது. இது மாதிரி கணக்கில்லா திருஷ்டாந்தங்கள் சொல்லிக் கொண்டேயிருக்கலாம். நம்பிக்கை உள்ளவர்களுக்கு திருஷ்டாந்தங்களே வேண்டாம். நம்பிக்கையில்லாதவர்களுக்கு எத்தனை திருஷ்டாந்தங்கள் சொல்லியும் பிரயோஜனமில்லை.

இவர்களுடைய ஸர்வாத்மபாவத் தன்மையால் எல்லோருடைய மனதிலுள்ள விருத்திகளும் இவர்களுக்கு பிரத்யக்ஷமாயிருந்தது. நாம் ஏதேனும் நினைத்தால் நாம் வாயைவிட்டுச் சொல்வதற்கு முன்னால் அவர்களிடமிருந்து பதில் வந்துவிடும். வாயைவிட்டுச் சொல்லிவிட்டோமோ வென்று நமக்கே ஸந்தேஹம் வந்துவிடும். ஒருநாள் இவர்கள் தன் குருநாதர் அதிஷ்டானத்தில் பூஜை செய்யும்போது லிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வெள்ளிக் கவசத்தை எடுத்து சாத்தும்போது, தர்சனம் செய்து கொண்டிருந்த ஒரு சிஷ்யர் "தேவதைகளுடைய ரூபங்களை நாம் பிரத்யக்ஷமாய் பார்த்திராததினால் நாம் கல்பித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. குருநாதர் ஸந்நியாஸியாயிருந்து ஸித்தியடைந்திருக்கிறாரென்று நன்கு தெரிந்திருக்கிற முறையில் இவருக்குமா பிடிமீசை வைத்து முகம் கல்பிக்க வேண்டும்?" என்று மனதிற்குள் நினைத்தார். அலங்காரமானவுடன் ஸ்ரீமத் ஆசார்யார் இந்த சிஷ்யரைப் பார்த்து மந்தஹாஸத்துடன் "ரூபமற்றவருக்கு ரூபம் கல்பிப்பதில் அது மாத்திரமா உனக்கு உறுத்துகிறது?" என்று கேட்டார்கள்.

(தொடரும்...)



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ॥ श्रीगणेशभुजङ्गम् ॥

.. ஶ்ரீக3ணேஶபு4ஜங்க3ம் ..



चिदानन्दसान्द्राय शान्ताय तुभ्यं
नमो विश्वकर्त्रे च हर्त्रे च तुभ्यम् |
नमोऽनन्तलीलाय कैवल्यभासे
नमो विश्वबीज प्रसीदेशसूनो ||८||

சிதா3னந்த3ஸாந்த்3ராய ஶாந்தாய துப்4யம்'
நமோ விஶ்வகர்த்ரே ச ஹர்த்ரே ச துப்4யம் |
நமோ(அ)னந்தலீலாய கைவல்யபா4ஸே
நமோ விஶ்வபீ3ஜ ப்ரஸீதே3ஶஸூனோ ||8||

चिदानन्दसान्द्राय {சிதா3னந்த3ஸாந்த்3ராய} = ஞானானந்த ஸ்வரூபியாயும்; शान्ताय {ஶாந்தாய} = அமைதி நிறைந்தவராயும் உள்ள;तुभ्यं {துப்4யம்'} = உமக்கு; नम: {நம:} = வணக்கம்; विश्वकर्त्रे च {விஶ்வகர்த்ரே ச} = உலகைப்படைப்பவராயும்; हर्त्रे च {ஹர்த்ரே ச} = அழிப்பவராயுமுள்ள; तुभ्यं {துப்4யம்'} = உமக்கு; नम: {நம:} = வணக்கம்; अनन्तलीलाय {அனந்தலீலாய} = எல்லையற்ற திருவிளையாடல்களையுடையவரும்; कैवल्यभासे {கைவல்யபா4ஸே} = (உண்மையில்) தாம் ஒருவராகவே விளங்குபவருமான உமக்கு; नम: {நம:} = வணக்கம்; विश्वबजि {விஶ்வப3ஜி} = உலகின் காரணமான; ईशानसूनो {ஈஶானஸூனோ} = பரமேச்வரனின் திருக்குமாரா; प्रसीद {ப்ரஸீத3} = பிரசன்னமடைவாயாக.

கடவுளை வழிபடும் முறையை நன்று அறிந்து வழி படுதலே சிறந்த வழிபாடு. அவரைப் போற்ற விரும்பும் ஒவ்வொருவனும் அவர்தான் உலகத்தைச் சிருஷ்டிப்பவன், காப்பவன், அழிப்பவன் என்று அறியவேண்டும். அவரன்றி அணுவும் அசையாதெனக் கூறுவர் சான்றோர். அவர்தான் ஞானானந்த ஸ்வரூபி, சாந்தர், மோக்ஷத்தைத் தருபவர். ஆகையால் அப்படிப்பட்டவருக்கு நாம் வணக்கம் செலுத்துவது அவசியம். அவரது அனுக்ரஹத்தை யாம் வேண்டுவோமாக.

इमं सुस्तवं प्रातरुत्थाय भक्त्या
पठेद्यस्तु मर्त्यो लभेत्सर्वकामान् |
गणेशप्रसादेन सिध्यन्ति वाचो
गणेशे विभौ दुर्लभं किं प्रसन्ने ॥ ९ ॥

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

இமம்’ ஸுஸ்தவம்’ ப்ராதருத்தா²ய ப⁴க்த்யா
படே²த்³யஸ்து மர்த்யோ லபே⁴த்ஸர்வகாமான் |
க³ணேஶப்ரஸாதே³ன
ஸித்⁴யந்தி வாசோ
க³ணேஶே விபௌ⁴ து³ர்லப⁴ம்’
கிம்’ ப்ரஸன்னே ||9||



इमं {இமம்’} = இந்த; सुस्तवं {ஸுஸ்தவம்’} = நல்ல தோத்திரத்தை; प्रात: {ப்ராத:} = காலையில்; उत्थाय {உத்தா²ய} = எழுந்து; भक्तया {ப⁴க்தயா} = பக்தியுடன்; य: {ய:} = எந்த; मर्त्य:तु {மர்த்ய:து} = மனிதன்; पठेत् {படே²த்} = படிப்பானோ அவன்; सर्वकामान् {ஸர்வகாமான்} = எல்லா விருப்பங்களையும்; लभेत् {லபே⁴த்} = அடைவான்; गणेशप्रसादेन {க³ணேஶப்ரஸாதே³ன} = கணேசருடைய அருளால்; वाच: {வாச:} = வாக்குகள்; सिध्यन्ति {ஸித்⁴யந்தி} = பலிக்கின்றன; विभौ {விபௌ⁴} = எங்கும் நிலவியவரும் ஸர்வவல்லமையுள்ளவருமான; गणेशे प्रसन्ने {க³ணேஶே ப்ரஸன்னே} = கணேசன் அருள் புரியும்பொழுது; दुर्लभं किम् {து³ர்லப⁴ம்’ கிம்} = கிடைப்பதற்கரியது யாது?

ஒவ்வொரு மனிதனும் அதிகாலையில் எழுந்து மிகுந்த பக்தியுடன் இந்தத் துதிப் பாடலைப் படிக்கவேண்டும். அவ்வாறு செய்யும் மானிடன் கணபதியின் அருளால் விரும்பிய பொருள்களனைத்தையும் அடைகிறான். அவனுடைய சொல் பலிக்கின்றது. ஏனெனில் கணபதியின் அருளிருக்கும்பொழுது அடையமுடியாதது ஒன்றுமே இல்லை.

ஸ்ரீ கணேச புஜங்கம் முற்றும்.



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ||ஸிவபக்தி கல்பலதிகா||


ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள்




भक्त्या त्वयीश कति नाश्रुपरीतदृष्ट्या
सञ्जातगद्गदगिरोत्पुळकाङ्गयष्ट्या |
धन्याः पुनन्ति भुवनं मम सा न हीति दुःखेऽपि का नु तव दुर्लभताविधित्सा ||18||

ப⁴க்த்யா த்வயீஶ கதி நாஶ்ருபரீதத்³ரு’ஷ்ட்யா
ஸஞ்ஜாதக³த்³க³த³கி³ரோத்புளகாங்க³யஷ்ட்யா |
த⁴ன்யா: புனந்தி பு⁴வனம்’ மம ஸா ந ஹீதி து³:கே²(அ)பி கா நு தவ து³ர்லப⁴தாவிதி⁴த்ஸா ||18||

ஈசனே ! தங்களுடைய கண்ணீரால் கலங்கிய பார்வையுடன் உண்டான தழதழத்த குரலுடன் மயிர் சிலிர்த்த உடலுடன் கூடிய உம்மிடம் பக்தி பரவசத்துடன் பாக்யசாலிகளான எவ்வளவோ பக்தர்கள் பூமியை புனிதப்படுத்தவில்லையா ? பலர் இவ்வாறு இந்த பூமியை உன்மேல் உள்ள தங்களின் பக்தியின் மூலம் புனிதப்படுத்துதல் என்ற செயல் என்னால் நன்றாக உணரப்பட்டது. அவ்வித பக்தி எனக்கு இல்லை என்று வருத்தம் உள்ள போதிலும் எனக்கு உமது (கருணை) தர்சனம் கிடைக்காமலே இருப்பது என்ற நிலையை ஏற்படுத்துவது ஏன் ?



त्वद्भक्तिरेतदनवाप्तिशुगप्युदारा श्रीस्सा च तावकजनाश्रयणे च लभ्या |
उल्लङ्घ्य तावकजनान् हि तदर्थनागस्त्वय्या सहस्व तदिदं भगवन्नमस्ते ||19||

த்வத்³ப⁴க்திரேதத³னவாப்திஶுக³ப்யுதா³ரா ஸ்ரீஸ்ஸா ச தாவகஜநாஶ்ரயணே ச லப்⁴யா |
உல்லங்க்⁴ய தாவகஜனான் ஹி தத³ர்த²நாக³ஸ்த்வய்யா ஸஹஸ்வ ததி³த³ம்’ ப⁴க³வந்நமஸ்தே ||19||

ஹே ! ப்ரபோ! இந்த உம்முடைய பக்தி கிடைக்கப் பெறாததால் வருத்தமும் உன் பெருந் தன்மையால்தான் அந்த சீரான நிலையும் உம்மைச் சார்ந்தவர்களை அண்டுவதால்தான் எளிதில் கிடைக்கும். அப்படிப்பட்ட உம்மைச் சார்ந்தவர்களை மீறி நான் உம்மிடம் நேரில் வேண்டுவது பாபமே (குற்றமே) என்று நினைக்கிறேன். அந்த இக்குற்றத்தையும் நீர் தான் பொறுத்தருள வேண்டும். உமக்கு அந்த கோடி நமஸ்காரங்கள். (தொடரும்)

# सन्ध्यावन्दनम्

## ஸந்த்⁴யாவந்த³னம்

[சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அருளிய விளக்கங்களுடன்]

**பொருளைத் தெரிந்துகொள்வதின் அவசியம்:**

ஸந்த்யாவந்தனத்தில் சப்தங்கள் (வார்த்தைகள்) மற்றும் செயல்களின் சேர்க்கை இருக்கின்றது. எப்படி ஸாமான்யமான சப்தங்களுக்குப் பொருள் இருக்கிறதோ அதேபோல் ஸந்த்யாவந்தனத்தில் உள்ள வார்த்தைகளுக்கும் அர்த்தம் இருக்கத்தானே வேண்டும்? நாம் ஸந்த்யாவந்தனத்தில் சொல்லும் வார்த்தைகளுக்குப் பொருளைத் தெரிந்து அதை அனுஷ்டிக்க வேண்டும். பொருள் தெரியாமலிருந்தால் ஏதாவது குறைவு ஏற்படாமல் இருக்குமா? மேலோட்டமாகப் பார்த்தாலே அர்த்தத்தின் அறிவு அவசியம் என்று நமக்குத் தெரிந்து விடும். கிளிகளைப் போல் சொற்களைத் திரும்பத் திரும்பச் சொன்னால் நமக்கு விசேஷமான சந்தோஷம் ஏற்படாது. தவிர சில சமயங்களில் வெறுப்பும் ஏற்படலாம். வேதம்,

यदेव विद्यया करोति... तदेव वीर्यवत्तरं भवति
**(छान्दोग्योपनिषद् १.१.१०)**

யதே³வ வித்³யயா கரோதி... ததே³வ வீர்யவத்தரம்’ ப⁴வதி **(சா²ந்தோ³க்³யோபநிஷத்³ 1.1.10)**

"எந்தக் கர்மாவை ஒருவன் அறிவுடன் செய்வானோ அதுதான் அதிக சக்தி உடையதாக ஆகிறது" என்று கூறிப் பொருளை அறிந்தால் மிக்க பலன் கிடைக்கும் என்று தெரிவிக்கிறது. வேதத்தின் ஓர் அங்கமான நிருக்தத்தில்,



स्थाणुरयं भारहारः किलाभूदधीत्य वेदं न विजानाति योऽर्थम् ।

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

बोऽर्थज्ञ इत्सकलं भद्रमश्नुते नाकमेति ज्ञानविधूतपाप्मा || (निरुक्त १.१८)

ஸ்தா²ணுரயம்’ பா⁴ரஹாரঃ கிலாபூ⁴த³தீ⁴த்ய வேத³ம்’ ந விஜானாதி யோ(அ)ர்த²ம் |

போ³(அ)ர்த²ஜ்ஞ இத்ஸகலம்’ ப⁴த்³ரமஶ்னுதே நாகமேதி ஜ்ஞானவிதூ⁴தபாப்மா || (நிருக்த **1.18)**

"எவன் வேதத்தை அத்யயனம் செய்து, அதன் பொருளை அறிந்து கொண்டிருப்பதில்லையோ அவன் பாரத்தைச் சுமக்கும் ஜடமானவன். பொருளைத் தெரிந்திருப்பவன் அனைத்து நன்மையையும் அடைகிறான். அறிவினால் பாபங்களிலிருந்து விடுபட்டவன் ஸ்வர்க்கத்தை அடைகிறான்" என்று சொல்லி அர்த்தத்தின் அறிவு பாராட்டப்பட்டுள்ளது. அர்த்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லிய காரணத்தால் அர்த்தம் தெரியாவிட்டால் கர்மாவைப் பண்ணவேண்டுமா, வேண்டாமா என்ற சந்தேகம் ஏற்படக்கூடாது. அர்த்தம் தெரியாமலிருந்து கர்மாவைச் செய்தாலும் பலன் ஏற்படும். ஆனால் குறைவாக ஏற்படும். அதே சமயம் கர்மாவைச் செய்யாமல் விட்டு விட்டால் பாவம் ஏற்படும். தவிர, கர்மாவை விட்டவன் ஸ்ரேயஸை அடையமாட்டான். ஆகவே 'நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? செய்யும் கர்மாவிலுள்ள வார்த்தைகளுக்கு அர்த்தமில்லையா?' என்று யோசித்து, அர்த்தத்தை முயற்சி செய்து தெரிந்து கொள்ள வேண்டும்.

एति जीवन्तमानन्दो नरं वर्षशतादपि (रामायण ५.३४.६)

ஏதி ஜீவந்தமானந்தோ³ நரம்’ வர்ஷஶதாத³பி (ராமாயண **5.34.6)**

"வாழ்கின்ற மனிதன் நூறு வருடங்களுக்குப் பிறகாவது ஆனந்தத்தை அடைகின்றான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், காலம் கடந்து விட்டதே என்று எண்ணாமல் நாம் இப்போதாவது அர்த்தத்தைத் தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

विप्रो वृक्षस्तस्य मूलं च सन्ध्या वेदः शाखा धर्मकर्माणि पत्रम् ।

तस्मान्मूलं यत्नतो रक्षणीयं छिन्न्ने मूले नैव शाखा न पत्रम् ॥ (चाणक्यनीति १०.१३)

விப்ரோ வ்ரு’க்ஷஸ்தஸ்ய மூலம்’ ச ஸந்த்⁴யா வேத³ঃ ஶாகா² த⁴ர்மகர்மாணி பத்ரம் .

தஸ்மான்மூலம்’ யத்னதோ ரக்ஷணீயம்’ சி²ன்ன்னே மூலே நைவ ஶாகா² ந பத்ரம் ..
(சாணக்யநீதி **10.13)**

(தொடரும்)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## श्रीमन्नारायणीयम्

## ஸ்ரீமந்நாராயணீயம்

### षष्ठं दशकम्

ஷஷ்ட²ம்’ த³ஶகம் விராட்புருஷநின் வடிவ வர்ணனை

माया विलासहसितं श्वसितं समीरो
जिह्वा जलं वचनमीश शकुन्तपंक्तिः ।
सिद्धादयः स्वरगणा मुखरन्ध्र-मग्नि-
र्देवा भुजाः स्तनयुगं तव धर्मदेवः || ६ ||

மாயா விளாஸஹஸிதம்’ ஶ்வஸிதம்’ ஸமீரோ
ஜிஹ்வா ஜலம்’ வசனமீஶ ஶகுந்தபங்க்தி: |
ஸித்³தா⁴த³ய: ஸ்வரக³ணா முக²ரந்த்⁴ர-மக்³னி-
ர்தே³வா பு⁴ஜா: ஸ்தனயுக³ம்’ தவ த⁴ர்மதே³வ: || 6 ||



ப்ரபோ ! உமது புன்சிரிப்பு மாயை என்று ப்ரஸித்தி பெற்று விளங்குகிறது, மூச்சு வாயுவாக மாறியது, நாக்கோ ஜலம், வாக்கு பறவைக் கூட்டம் என்று விளங்குகிறத. ஸ்வரங்களின் தொகுதி ஸித்தர் முதலியவர்கள், வாய் அக்னியே என்றும், உமது வலிய கைகள் தேவர்களானார்கள், ஸ்தனங்கள் இரண்டும் தர்ம தேவன் என்று வேதம் சொல்கிறது.

पृष्ठं त्वधर्म इह देव मनः सुधांशु -
रव्यक्तमेव हृदयांबुज - मबुजाक्ष |
कुक्षिः समुद्रनिवहा वसनं तु सन्ध्ये
शेफः प्रजापतिरसौ वृषणौ च मित्रः ||७||

ப்ரு’ஷ்ட²ம்’ த்வத⁴ர்ம இஹ தே³வ மன: ஸுதா⁴ம்’ஶு -
ரவ்யக்தமேவ ஹ்ரு’த³யாம்பு³ஜ - மபு³ஜாக்ஷ |
குக்ஷி: ஸமுத்³ரனிவஹா வஸனம்’ து ஸந்த்⁴யே
ஶேப²: ப்ரஜாபதிரஸௌ வ்ரு’ஷணௌ ச மித்ர: ||7||

தேவா! இவ்வுருவத்தில் பிருஷ்ட்டம் (பின்பக்கம்) அதர்மம், மனம் சந்திரன், கமலக்கண்ணா! இருதயம் அவ்யத்தம் (பிரதானம்), வயிறு ஸமுத்திரங்கள், வஸனம் ஸந்தியை, ஆண்குறி பிரஜாபதி, அண்டங்கள் மித்ர தேவதை.

श्रोणीस्थल मृगगणाः पदयोर्नखास्ते
हस्त्युष्ट्रसैन्धवमुखा गमनं तु कालः ।
विप्रादि वर्ण भवनं वदनाब्ज बाहु-

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

चारूरुयुग्म चरणं करुणांबुधे ते ||८||
ஶ்ரோணீஸ்த2ல ம்ரு’க3க3ணா: பத3யோர்நகா2ஸ்தே
ஹஸ்த்யுஷ்ட்ரஸைந்த4வமுகா2 க3மனம்’ து கால: |
விப்ராதி3 வர்ண ப4வனம்’ வத3னாப்3ஜ பா3ஹு-
சாரூருயுக்3ம சரணம்’ கருணாம்பு3தே4 தே ||8||

கருணைக் கடலே! உமது இடுப்பு ப்ரதேசம் மிருக கணங்கள், கால் நகங்கள் யானை ஒட்டகம் குதிரை முதலியவை, நடை காலம், உமது முகம், கைகள், அழகிய துடைகள், கால்கள் ஆகியவை பிராமணர் முதலிய ஜாதிகளின் பிறப்பிடம்.

संसार चक्रमयि चक्रधर क्रियास्ते
वीर्यं महासुरगणोऽस्थि - कुलानि शैलाः |
नाड्यस्सरित् समुदयस्तरवश्व रोम
जीयादिदं वपुरनिर्वचनीय - मीश ||९||
ஸம்’ஸார சக்ரமயி சக்ரத4ர க்ரியாஸ்தே
வீர்யம்’ மஹாஸுரக3ணோ(அ)ஸ்தி2 - குலானி ஶைலா: |
நாட்3யஸ்ஸரித் ஸமுத3யஸ்தரவஶ்வ ரோம
ஜீயாதி3த3ம்’ வபுரநிர்வசனீய - மீஶ ||9||

சக்ரபாணியே! உமது செயல்கள் ஸம்ஸார சக்ரத்தின் சுழற்சி, வீரியம் பெரிய அசுரக்கூட்டம், எலும்புத் தொகுதிகள் மலைகள், நாடிகள் நதிக் கூட்டம்,ரோமம் மரங்கள், ஈசா! வர்ணிக்க முடியாத இந்த விராட் சரீரம் வெற்றியுடன் விளங்கட்டும்.

ईदृग्जगन्मय-वपुस्तव कर्मभाजां
कर्मावसान समये स्मरणीयमाहुः |
तस्यान्तरात्मवपुषे विमलात्मने ते
वातालयाधिप नमोऽस्तु निरुन्धि रोगान् ||१०||
ஈத்3ரு’க்3ஜக3ன்மய-வபுஸ்தவ கர்மபா4ஜாம்’
கர்மாவஸான ஸமயே ஸ்மரணீயமாஹு: |
தஸ்யாந்தராத்மவபுஷே விமலாத்மனே தே
வாதாலயாதி4ப நமோ(அ)ஸ்து நிருந்தி4 ரோகா3ன் ||10||

உம்முடைய உலக வடிவான இந்த சரீரம் கர்ம மார்க்கத்தில் உள்ளவர்களுக்கே கருமங்களின் முடிவில் ஸ்மரிக்கத் தக்கதென்று கூறுகிறார்கள். குருவாயூரப்பா! அதன் அந்தராத்ம ஸ்வரூபியாக உள்ள சுத்த ஸத்வ மூர்த்தியான உமக்கு நமஸ்காரம். நோய்களைப் போக்கி எனக்கு அருளும். (தொடரும்..) Our Mail ID : Info@voiceofjagadguru.com


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्री रुद्रप्रश्नः

## ஸ்ரீ ருத்³ரப்ரஶ்ன:

(நமகம்)

1.5. (கிரிச) கயிலையில் உறைபவரே! (த்வா) உம்மை (அச்சா) அடைவதற்கு (சிவேன) மங்களகரமான (வசஸா) ஸ்துதிவசனங்களால் (வதாமஸி) போற்றுகிறோம். (ந) எங்களுடைய (ஜகத் இத்) உறவினரும் ஆவினம் முதலியவைகளும் (ஸர்வம்) எல்லாம் (அயக்ஷ்மம்) நோயற்றவையாகவும் (ஸுமனா) பரஸ்பரம் நேசம்மிக்கவையாகவும் (யதா) எவ்வாற்றால் (அஸத்) விளங்குமோ - அவ்வாறு அருள் புரிதல் வேண்டும்.

1.6. (ப்ரதம:) அனைத்துலகிற்கும் முதலாகியவரும் (தைவ்ய:) தேவர்களின் தெய்வத்தன்மையாயிருப்பவரும் (பிஷக்) பிறவிப் பிணிக்கு வைத்தியரும் (அதிவக்தா) பக்தர்களின் குற்றத்தை மறந்து குணத்தைக் கொண்டாடுகிறவரும் ஆகிய பரமேசுவரன் (ஸர்வான்) எல்லா (அஹீம்ச்ச) பாம்பு முதலிய துஷ்ட ஜந்துக்களையும் (ஸர்வாச்ச) எல்லா (யாதுதான்ய:) அரக்கர்களையும் (ஜம்பயன்) அழித்து (அத்யவோசத்) எங்களுக்காகப் பரிந்து பேசட்டும்.

1.7. (தாம்ர:) தாமிரம் போல் சிவந்தும் (உத அருண:) இன்னும் கூடச் சற்றுச் சிவந்தும் (பப்ரு:) பொன்னிறமாயும் (ஸுமங்கல:) சிறந்த மங்கள ஸ்வரூபியாயும் (ய:) எந்த சூரியன் விளங்குகிறாரோ அவர் (அஸௌ) இந்த ருத்திரனே (இமாம்) இந்த பூமியை (அபித: திக்ஷு) எல்லா திக்கிலும் வியாபித்திருக்கும் (ருத்ரா:) ருத்திர மூர்த்திகள் (ச) மேலும் (யே) எவர்கள் (ஸஹஸ்ரச:) ஆயிரக்கணக்காக (ச்ரிதா:) இருக்கின்றார்களோ (ஏஷாம்) இவர்கள் எல்லோருடைய (ஹேட:) கோபமும் (அவ ஈமஹே) தணிந்து போகும்படி வழிபடுகின்றோம்

1.8. (ய:) எவர் (நீலக்ரீவ:) கரிய கழுத்தையுடையவரோ அவரே (விலோஹித:) சிவந்த வர்ணமுடையவராகிய (அஸௌ) இந்த சூரியனாக (அவஸர்ப்பதி) வெளிக் கிளம்புகிறார். (ஏனம்) சூரிய ரூபியாகிய இந்த ருத்திரனை (கோபா: உத) இடையர்களுங்கூட (அத்ருசன்) பார்க்கின்றனர். (உதஹார்ய:) தண்ணீர் கொண்டுவரும் பெண்களும் (அத்ருசன்) பார்க்கின்றனர். (ஏனம்) இந்த ருத்திரனை (விச்வாபூதானி உத) மற்றும் எல்லாப் பிராணிகளுங்கூடப் பார்க்கின்றன. (த்ருஷ்ட:) அங்ஙனம் தரிசிக்கப் பெற்ற (ஸ:) ஆதித்திய ரூபியாகிய அவர் (ந:) நம்மை (ம்ருடயாதி) இன்புறச் செய்யட்டும்.

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்